**சுருக்கம்**

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை – தமிழ்நாடு புள்ளிஇயல் பணி – புள்ளிஇயல் கூடுதல் இயக்குநர் பணியிடங்கள் – 2019–2020 ஆம் ஆண்டிற்கான புள்ளிஇயல் கூடுதல் இயக்குநர் பணியிடத்திற்கு பணி நியமனம் வழங்கி – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (புஇ.1) துறை**

அரசாணை (நிலை) எண்.34

நாள் : 27.05.2020
சார்வரி – வைகாசி : 14
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்க :–

1. அரசாணை (நிலை) எண்.25, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (புஇ.1) துறை, நாள் 30.04.2020.
2. அரசாணை (நிலை) எண்.33, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (புஇ.1) துறை, நாள் 27.05.2020.
3. ஆணையர், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை கடித எண். 4300/பி.1/2020, நாள் 07.05.2020.
4. அரசாணை (வாலாயம்) எண்.159, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (புஇ.1) துறை, நாள் 08.11.2019.

……..

ஆணை:–

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையில் 2019–2020 –ஆம் ஆண்டிற்கு புள்ளிஇயல் கூடுதல் இயக்குநர் பதவி உயர்விற்கு காலிப் பணியிட எண்ணிக்கை "1" என வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 2019–2020 ஆம் ஆண்டிற்கான புள்ளிஇயல் கூடுதல் இயக்குநர் பதவி உயர்விற்கு முதுநிலை வரிசைப்படியான ஒரு புள்ளிஇயல் இணை இயக்குநரைக் கொண்ட முறையான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆணையர், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை அவர்கள் அளித்த பரிந்துரையினை ஏற்று துறைத் தலைமையிடத்தில் காலியாக உள்ள வேளாண்மை கணக்கெடுப்பு திட்ட கூடுதல் இயக்குநர் காலிப்பணியிடத்தில்

திரு. எப்.சார்லஸ் மரிய ஜோசப், புள்ளிஇயல் இணை இயக்குநர் [மாற்றுப் பணியில் பிரிவுத் தலைவர் (HOD) மாநில கொள்கை வளர்ச்சி குழு (SDPC) முன்னதாக மாநில திட்டக் குழு (SPC)] அவர்களுக்கு புள்ளிஇயல் கூடுதல் இயக்குநராக பதவி உயர்வில் பணி நியமனம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ ரகுநந்தன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, சென்னை–6.
உரிய அலுவலர், பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, சென்னை–6.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
மாநில தலைமை கணக்காயர், சென்னை –18/35.

நகல்:

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாக சீர்த்திருத்தத் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமை செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
திட்டம் (ம) வளர்ச்சி துறை, சென்னை–9.
உறுப்பினர் செயலர், மாநில கொள்கை வளர்ச்சி குழு, சென்னை–5.
இருப்பு கோப்பு /உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்